கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

CC No.62/2023

நாள்.20.01.2026 ம.சா.1 திரு.வெங்கடேஷ்வரன்

த/பெ திரு.முத்தையா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1) எதிரி பாரதிதாசனை 2008 முதல் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். என்னுடைய சகோதரர் ஆறுமுகம் டிராவல் ஏஜென்சி நடத்தி வருகிறார் என்றால் சரிதான். எனது சகோதரர் ஆறுமுகம் மூலம் எதிரி பாரதிதாசன் எனக்கு அறிமுகம் ஆனார் என்றால் சரிதான். எதிரி பாரதிதாசனின் சொந்த ஊர் திருநெல்வேலி மாவட்டம் ஆரோக்கியநாதபுரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கடைகளுக்கு பணம் கொடுத்து நாள்தோறும் வகையில் வசூல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிரி பாரதிதாசன் டிராவல் ஏஜென்சியில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். எதிரி பாரதிதாசன் வாடகை வீட்டில் குடியிருந்தார் அவரை வீட்டில் சந்திப்பது வழக்கம் என்றால் சரிதான்.

2) 2016ம் ஆண்டு எதிரி பாரதிதாசன் என்னிடம் ரூ.50 ஆயிரம் சொந்த செலவிற்காக வாங்கினார் என்றால் சரியல்ல, எதிரி பாரதிதாசன் என்னிடம் ரூ.1 இலட்சத்தி 30 ஆயிரம் பணம் வாங்கினார். எதிரி பாரதிதாசன் என்னிடம் எப்போது ரூ.1 இலட்சத்தி 30 ஆயிரம் கடன் வாங்கினார் என்றால் 13.06.2017 அன்று வாங்கினார். எதிரி பாரதிதாசன் நீதிமன்ற கேள்வியின் போது ரூ.50 ஆயிரம் கடன் வாங்கியதாகவும் ரூ.29 ஆயிரம் திருப்பி அளித்துவிட்டதாகவும், மீதம் ரூ.21 ஆயிரத்தை தந்துவிடுவதாகவும் பதில் அளித்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு காசோலையினை எதிரி பாரதிதாசன் கையொப்பம் இட்டு மட்டும் கொடுத்தார் என்றால் சரியல்ல, எதிரி பாரதிதாசன் தான் காசோலையை நிரப்பி கொடுத்தார்.

3) காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் காசோலையில் நிரப்பப்பட்டுள்ள கையொழுத்திற்கும் உள்ள வேறுபாட்டை ஆய்வு மூலம் தெரிந்து கொள்ளலாம் என்றால் சரிதான். எனது சொந்த ஊர் வள்ளியூர் என்னுடைய உறவினர்களும் வள்ளியூரில் தான் உள்ளார்கள் என்றால் சரிதான். எதிரி பாரதிதாசன் தரவேண்டிய ரூ.21 ஆயிரத்தை திருப்பி



MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.01.20 15:09:33 +0530

தருவதற்கு என்னை தொடர்பு கொண்ட பிறகும் நான்  மறுத்து விட்டேன் என்றால் எதிரி பாரதிதாசன் என்னை தொடர்பு கொள்ளவில்லை, நான் மறுக்கவும் இல்லை.

4) எதிரி பாரதிதாசனுக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. எதிரி பாரதிதாசன் குடியிருந்த வாடகை வீட்டுக்கு நான் செல்வதுண்டு அங்கு இருவரும் மது அருந்தினோம் என்றால் சரியல்ல. மேற்படி பழக்க வழக்கத்தில் தான் காசோலையை கையொப்பம் இட்டு வாங்கினேன் என்றால் சரியல்ல. எதிரி பாரதிதாசன் வெளியூர் வாசி என்பதால் அவரை மிரட்டி காசோலையில் கையொப்பம் வாங்கினேன் என்றால் சரியல்ல. எதிரி பாரதிதாசன் நீதிமன்ற கேள்வியில் பதில் கூறியது  போல் எனக்கு ரூ.21 ஆயிரம் தர தயாராக உள்ளார் என்றால் சரியல்ல.

ம.சா.1 குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை** - இல்லை.

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.01.20 15:09:51 +0530